வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவற்றைப் பிரித்ததோடு மட்டுமல்லாமல், கட்டடங்களையும் வழங்கியுள்ளீர்கள், அதற்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) மின்சாரம் தாக்கி, பாம்பு கடித்து, நீரில் மூழ்கி மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாலை விபத்தில் இறந்தவர்களுக்கு சிறப்பு நிவாரணம் கோரி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஈஸ்வரன், திரு. எஸ். ஆஸ்டின், திரு. துரை. சந்திரசேகரன் ஆகியோரும், வீட்டு சுவர் இடிந்து விழுந்ததால் அகால மரணம் அடைந்தவர்களுக்கு நிவாரணம் கோரி திரு. துரை. சந்திரசேகரன் அவர்களும், கடல் அலையில் சிக்கி அகால மரணமடைந்தவர்களுக்கு நிவாரணம் கோரி திரு. த. மனோ தங்கராஜ் அவர்களும், மின்சாரம் தாக்கி இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் கோரி திரு. கே.எஸ். மூர்த்தி அவர்களும் 55–வது விதியின்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இவர்கள் அவையினுடைய கவனத்தினை ஈர்த்ததாகக் கருதப்படுகிறது. மேலும், மாண்புமிகு அமைச்சர்களும், உறுப்பினர்களும் தங்கள் தொகுதிகளில் இதுபோன்ற அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீடு கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அறிவிப்பு வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் தாக்கி, பாம்பு கடித்து, நீரில் மூழ்கி மற்றும் சாலை விபத்துகளில் உயிர் இழந்தோர் குடும்பங்களின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு நிவாரணம் வேண்டி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.எஸ். மூர்த்தி, திரு. த. மனோ தங்கராஜ், திரு. எஸ். ஆஸ்டின், திரு. துரை. சந்திரசேகரன், திரு. எஸ். ஈஸ்வரன் ஆகியோரிடமிருந்து கவன ஈர்ப்பு அறிவிப்புகள் வரப்பெற்றுள்ளன. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2019 ஜூலை 18

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.ஆர். பெரியகருப்பன், திருமதி வி. கஸ்தூரி வாசு, திரு. க.நா. விஜயகுமார், திரு. C.V. சேகர், திருமதி எஸ். விஜயதரணி, திரு. எஸ். ஈஸ்வரன், திரு. ப. பலராமன், திரு. எட்டிமடை அ. சண்முகம் ஆகியோரிடமிருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இக்கோரிக்கைகளை பரிசீலித்து கீழ்க்கண்டவாறு நிவாரணம் அறிவிக்கிறேன்:

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஒடத்துறை கிராமத்தினைச் சேர்ந்த திரு. லோகநாதன் என்பவரின் மகன் திரு. சிவபாலன்; இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், சாயல்குடி கிராமத்தினைச் சேர்ந்த திருமதி ரேவதி என்பவரின் கணவர் திரு. விஜயராமலிங்கம்; நாமக்கல் மாவட்டம், பரமத்தி–வேலூர் வட்டம், பில்லூர் கிராமத்தினைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மகன் திரு முத்துகிருஷ்ணன்; கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், அர்த்தநாரிபாளையம் கிராமத்தினைச் சேர்ந்த திரு. தங்கவேல் என்பவரின் மகன் திரு. காளிதாஸ்; சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், கல்லம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமச்சந்திரன் என்பவரின் மகன் திரு. ராதாகிருஷ்ணன்; திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பெருஞ்சேரி கிராமத்தினைச் சேர்ந்த திருமதி தனலட்சுமி என்பவரின் கணவர் திரு. விஸ்வநாதன் மற்றும் திரு. குமார் என்பவரின் மகன் செல்வன் தெட்சிணாமூர்த்தி; தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் மற்றும் நகரத்தினைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரது மகன் திரு. ரெங்கசாமி; கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், மாவுத்தம்பதி கிராமத்தினைச் சேர்ந்த திருமதி ஸ்டெல்லா என்பவரின் மகள் சுவாதி ஆகியோர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், பொன்னவராயன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்ரமணி என்பவரின் மனைவி திருமதி செண்பகவள்ளி என்பவர் பாம்பு கடித்து உயிரிழந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், காத்தாட்டிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் செல்வன் ராஜன் என்பவர் பள்ளி சென்றுவிட்டு வீடு திரும்பும்போது பலத்த காற்றின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தார்.

2019 ஜுலை 18][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

பிற்பகல் 12–10

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், மனக்கரம்பை கிராமத்தைச் சேர்ந்த திரு. கருணாநிதி என்பவரின் மகன் திரு. தம்பூட்டு என்கின்ற திருமுருகன்; கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தேரூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வள்ளிநாயகம் என்பவரின் மகன் திரு. மணிகண்டன் மற்றும் அவரது மனைவி திருமதி மீனாட்சி செல்வி; சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், முகலிவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சந்திரகலா என்பவரின் மகன் திரு. மணிகண்டன் மற்றும் திருமதி கீதா என்பவரின் மகன் திரு. மோகன்; ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், வைரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பன் என்பவரின் மகன் திரு. செல்வகுமார்; ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், மாதம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நஞ்சப்ப கவுண்டர் என்பவரின் மகன் திரு. கே.என். பழனிசாமி; திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், கணக்கம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மகன் செல்வன் பார்த்திபன்; திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், செண்பகாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அருணாச்சலம் என்பவரின் மகன் திரு. கருத்தப்பாண்டியன் ஆகியோர் சாலை விபத்துகளில் உயிரிழந்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வில்லுகுறி கிராமத்தைச் சேர்ந்த திருமதி வீணா என்பவரின் கணவர் திரு. வேணுகுமார் என்பவர் திருவள்ளூர் பழவேற்காடு கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது, தலையில் பலத்த காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் ஆலம்பள்ளம், வாடியக்காடு பகுதியைச் சேர்ந்த திரு. முனிகிருஷ்ணன் என்பவரின் மகன் சிறுவன் தருண் என்பவர் நாய் கடித்து, பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 22 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த திரு. சிவபாலன், திரு. விஜயராமலிங்கம், திரு. முத்துகிருஷ்ணன், திரு. காளிதாஸ், திரு. ராதாகிருண்ணன், திரு. விஸ்வநாதன், செல்வன்

தட்சணாமூர்த்தி, திரு. ரங்கசாமி, செல்வி சுவாதி மற்றும் பாம்பு கடித்து உயிரிழந்த திருமதி செண்பகவள்ளி ஆகியோரின் குடும்பத்திற்கு தலா 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்தும், (மேசையைத் தட்டும் ஒலி) சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்த செல்வன் ராஜன் என்பவரின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், (மேசையைத் தட்டும் ஒலி) சாலை விபத்தில் உயிரிழந்த திரு. மணிகண்டன் மற்றும் அவருடைய மனைவி திருமதி மீனாட்சி செல்வி, திரு. மணிகண்டன், திரு. மோகன், திரு. தம்பூட்டு என்கிற திருமுருகன், திரு. செல்வகுமார், செல்வன் பார்த்திபன், திரு. பழனிசாமி, திரு. பார்த்திபன், திரு. கருத்தப்பாண்டியன்; கடலில் மூழ்கி உயிரிழந்த திரு. வேணுகுமார், நாய் கடித்து உயிரிழந்த சிறுவன் தருண் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா 1 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஐ) உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழ் மொழியில் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன, திரு. தமிமுன் அன்சாரி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிராந்திய மொழிகளில் தீர்ப்புகள் வழங்கப்படும் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தாய் தமிழ்நாட்டில், தமிழ் மொழி தொன்மையானது, உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழி. ஆனால், நம்முடைய தேசத்தில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை ஏன் தமிழ் மொழியில் தரக் கூடாது என்று நம்முடைய அரசின் கவனத்தை ஈர்க்கிறேன். தமிழ் மொழியிலும் தீர்ப்புகள் கிடைக்கப்பெறுவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நன்றி ஐயா, வணக்கம்.*